மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.05/2022
உள்
அசல் வழக்கு எண்.58/2019

-------------

ஜெகதீஷ் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சந்திரபோஸ்
2. சந்தனக்குமார்
3. சார்பதிவாளர், சாத்தூர்
4. மாவட்ட பதிவாளர்
   விருதுநகர் மாவட்டம்
5. தமிழக அரசுக்காக
   மாவட்ட ஆட்சியர், விருதுநகர் ... 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/
   1 முதல் 5 பிரதிவாதிகள்

இந்த மனு 05.09.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 14.10.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசுப்பணிகள் வழக்கறிஞர் திரு.கே.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தோன்றா தரப்பினராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் பிரிவு 151-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா அசல் வழக்கில் பிராதில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி 05.09.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

தாவா அசல் வழக்கு 3ம் பிரதிவாதி சார்பதிவாளர், சாத்தூருக்கு எதிராக பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளபடியால், 4ம் பிரதிவாதியான மாவட்ட பதிவாளரை தரப்பினராக சேர்த்து அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்படி 3, 4 பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் மேற்படியார்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அவர்களுக்கு எதிராக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெற வேண்டியுள்ளபடியால், அரசினை தரப்பினராக சேர்க்க வேண்டியுள்ளது. அதன்பொருட்டு இவ்வழக்கில் தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர்,விருதுநகர் மாவட்டத்தை அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியுள்ளது. மேற்படி 5ம் பிரதிவாதியாக தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர், விருதுநகரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி வாதி தரப்பில் இ.ம.எண்.04/2021 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு நீதிமன்றத்தால் கடந்த 12.07.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் தாவா அசல் வழக்கின் பிராதின் 5ம் பிரதிவாதி தமிழக அரசுக்காக, மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டம் அவர்களை தரப்பினராக சேர்த்து சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே, தாவா அசல் வழக்கில் தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டத்தை அசல் வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்த்து அசல் வழக்கின் பிராதினை சீர்திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி 05.09.2022ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 4, 5ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரை சுருக்கம்:-**

அசல் வழக்கானது விசாரணைக்காக போடப்பட்டிருந்தது. மேற்படி வழக்கில் அரசு அலுவலரை கட்சியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்தால் அரசையும் வழக்கில் அவசிய கட்சியாக சேர்க்க வேண்டுமென்று விபரம் நன்கு தெரிந்தும்,

மனுதாரர் அரசை கட்சியாக சேர்க்காமல் வேண்டுமென்றே இருந்துவிட்டு தற்போது கட்சியாக சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளது ஏற்கும்படியாக இல்லை. மேலும் மனுதாரர் மனுவானது தெளிவான காரணங்கள் குறிப்பிடாமலும் தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் மனுவானது எதிர்மனுதாரர்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7). தீர்வு:-</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் தாவா அசல் வழக்கில் பிராதில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி 05.09.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மேலும் இ.ம.எண்.04/2021 மனுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிர் உரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த

நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள், இ.ம.எண்.04/2021 மனு அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு தாவா அசல் வழக்கில் பிராதில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி 05.09.2022ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.